தேசிய சேமிப்பு வங்கி.

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களானவை தேசிய சேமிப்பு வங்கியின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களானவை 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான தேசிய சேமிப்பு வங்கியினதும் அதன் துணை கம்பனியினதும் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த உண்மையானதும் ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இகநி)**

**இகநி 16**

ரூபா 361,158,839 கிரயத்திலான 540 விடயங்கள் முற்றாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தேசிய சேமிப்பு வங்கியால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அவற்றை மீள மதிப்பீடு செய்து கணக்கிற்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

**1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

உஸ்வெட்டகெய்யாவில் உள்ள ரூபா 6,995,174 பெறுமதியான காணி 2009 ஆம் ஆண்டில் கடற்படையினரால் சுவீகரிக்கப்பட்டபோதும், 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அது நடைபெறும் வேலையாகத் தொடர்ந்து காட்டப்பட்டவாறிருந்தது.

### 1.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஊ.சே.நி, ஊ.ந.பொ.நி உதவு தெகைகள் முறையே ரூபா 240,254,639 மற்றும் ரூபா 59,942,007 என்பனவாகும். எனினும், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட சீராக்கலுக்குள்ளான மொத்தச் சம்பளங்களின் அடிப்படையிலான கணிப்பீட்டிற்கமைய அவை முறையே ரூபா 240,079,027 மற்றும் ரூபா 60,019,757 என்பனவாகும். இனங்காணப்பட்ட வித்தியாசம் 175,612 மற்றும் ரூபா 77,749 என்பனவாகும்.

(ஆ) நம்பிக்கைப் பொறுப்புச் சான்றிதழ்களின் கீழான முதலீடுகளின் கீழ் நிதிக் கம்பனி ஒன்றில் ரூபா 184,420,746 முதலீடாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீதிகளை உறுதிப்படுத்தியதன் மூலமும் வங்கியால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் படியும் முதலீடுகளது பெறுமதி ரூபா 185,701,000 ஆகியது. இதனால் அவதானிக்கப்பட்ட வித்தியாசம் ரூபா 1,280,253 ஆகும்.

### 1.2.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்பாடற்ற கணக்குகளின் பொருட்டுத் திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய ரூபா 260,044,858 ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக வருமதியாக இருந்தது.

(ஆ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமதியாகவிருந்த மோசடிப் பற்றுதல்களுடன் தொடர்புடைய ரூபா 13,963,717 மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதில் ரூபா 13,188,717 ஓராண்டிற்கு மேற்பட்டதாகும்.

(இ) வாடிக்கையாளர்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புத் தொகையான ரூபா 1,682,084 மற்றும் ரூபா 1,924,524 என்பன முறையே 5 ஆண்டுகளுக்கும் 3 ஆண்டுகளுக்கும் மேற்பட்டனவாகும்.

(ஈ) ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,699,061 மீதியானது வைப்புகளை விடுவிக்கும் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| நிதிக்கூற்றுக்களில் உள்ள விடயம் | தொகை | வழங்கப்படாத ஆவணச் சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| சில்லறைக் கடன்கொடுத்தோர் | 28,028,481 | காலப் பகுப்பாய்வு |
| கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 26,006,153 | காலப் பகுப்பாய்வு |
| சேகரிப்புக்கு அனுப்பப்பட்ட சிட்டைகள் | 248,728,135 | காலப் பகுப்பாய்வு |
| வழங்குனருக்கான முற்பணங்கள் | 8,062,774 | உறுதிப்படுத்தல்கள் |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2007 இன் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | (i) இருநூற்றிரண்டு சந்தர்ப்பங்களில் வாடிக்கையாளர்களிடமிருந்து கணக்குகளை ஆரம்பிப்பதற்கான விண்ணப்ப படிவத்துடன் வரிப் பிரகடனக் கூற்றுக்களை 15 கிளைகள் பெறாதிருந்தன. |
| | (ii) ரூபா 500,000 க்கு மேற்படாத தமது மதிப்பிடக்கூடிய வருமானத்தைக் குறிக்கும் வரிப் பிரகடனக் கூற்றுக்களை 15 கிளைகளின் 63 வாடிக்கையாளர்கள் சமர்ப்பித்திருந்தபோதும், ரூபா 756,312,255 தொகையுடைய வைப்புகள் |

மேற்படி வரம்பை மீறியிருந்தன.

(ஆ) 2006 ஒக்டோபர் 05 ஆந் திகதிய 06 ஆம் இலக்கத்தால் திருத்தப்பட்ட 2006 ஜனவரி 25 ஆந்திகதிய 8 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவராண்மைச் சுற்றறிக்கையின் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை

(i) அத்தியாயம் 2.14.1

(i) பின்வரும் கொள்வனவுகளின்போது தேசிய போட்டித் தன்மை கேள்வி நடைமுறை கடைப்பிடிக்கப்படவில்லை.

* 10 எண்ணிக்கையிலான யூபீஎஸ் களை ரூபா 4,895,520 க்குக் கொள்வனவு செய்தல்
* ஹப்பன் வெகுமதிப் பொருட்களை ரூபா 96,000,000 க்குக் கொள்வனவு செய்தல்

(ii) அத்தியாயம் 3.3

(i) வங்கியில் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து நேரடியாகவே கேள்விகள் கோரப்பட வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 8,484,000 க்கு 75 இன்போர்மிக்ஸ் யூசர் அனுமதிப்பத்திரங்களைக் கொள்வனவு செய்கையில் பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து தேசிய சேமிப்பு வங்கி கேள்விகளைக் கோரவில்லை.

(ii) வழங்குநர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளபோது அவர்களுடன் சேர்த்து போட்டித் தன்மைவாய்ந்த விலைகளைச் சமர்ப்பிக்கக்கூடிய வாய்ப்பான வழங்குனர்களிடமிருந்தும் கேள்விகள் கோரப்படவேண்டும். எவ்வாறாயினும், இன்போர்மிக்ஸ் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் ஐபீஎம் கம்பனியின் ஏனைய வியாபாரப் பங்குதாரர்களிடமிருந்து தே.சே.வ

கேள்விகளைக் கோரவில்லை.

(iii) அத்தியாயம் 4.2.1 — 2012 ஆம் ஆண்டிற்கான பிரதான கொள்வனவுத் திட்டமும் விரிவான கொள்வனவுத் திட்டமும் தயாரிக்கப்படவில்லை.

(iv) அத்தியாயம் 8:9:3 — ரூபா 500,000 மேற்பட்ட ஒப்பந்தங்களின்போது முறையான ஒப்பந்த உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். எவ்வாறாயினும், இத்தேவையானது பின்வரும் கொள்வனவுகளின் போது நிறைவேற்றப்படவில்லை.

(அ) 57,100 பிளென்டர்கள் மற்றும் 30,000 சோஸ் பேன் என்பவற்றை ரூபா 64,117,500 க்குக் கொள்வனவு செய்தல்

(ஆ) ரூபா 4,895,520 க்கு 10 யூபீஎஸ் களைக் கொள்வனவு செய்தல்

(இ) ரூபா 11,891,196 க்கு 40 நில சுவீட்சகளைக் கொள்வனவு செய்தல்

(ஈ) ரூபா 7,866,000 க்கான 2012 ஆம் ஆண்டின் சுத்திகரிப்புச்சேவை ஒப்பந்தம்

(உ) ரூபா 27,065,000 க்கு 80 எண்ணிக்கையிலான டிஜிடெல் மீடியா சிஸ்டம்களைக் கொள்வனவு செய்தல்

(ஊ) ரூபா 8,484,000 க்கு 75 இன்போர்மிக்ஸ் யூசர் அனுமதிப் பத்திரங்களைக் கொள்வனவு செய்தல்.

(இ) 2000 இன் 38 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் மற்றும் 2000 ஜனவரி மாத பீஎப்/பீஈ/06 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை — குறித்த ஏற்பாடுகளுக்கு முரணாக வங்கியின் ஊழியர்களுக்கான ரூபா 50,963,789 உழைக்கும் போதே செலுத்தும் வரித் தொகையினை 2012 ஆம் ஆண்டிற்காக தனது சொந்த நிதியிலிருந்து வங்கி செலுத்தியிருந்தது.

(ஈ) தேசிய சேமிப்பு வங்கி பொது முகாமையாளரின் 425/97 ஆம் இலக்கச் — கடன் தொகை தீர்த்து வைக்கப்படும் வரை நிலையான வைப்புகளை விடுவிக்கலாகாதெனினும், 4 கிளைகளில் உள்ள ரூபா 766,353 கடனைச்

| | |
|---|---|
| சுற்றறிக்கை | செலுத்தாமலேயே எட்டு நிலையான வைப்புக் கணக்குகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தன. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதிலான வங்கியின் செயற்பாட்டினால் விளைந்த வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 6,169 மில்லியன் ஆகும். இதனோடு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 9,255 மில்லியன் ஆகும். இது நிதி விளைவுகளில் ரூபா 3,086 மில்லியன் அல்லது 33.34 சதவீத குறைவை சுட்டிக் காட்டுகின்றது.

வங்கியின் துணைக் கம்பனியின் செயற்பாட்டினால் மீளாய்வாண்டின்போது விளைந்த வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 52 மில்லியன் ஆகும். இதனோடு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னாரான தேறிய இலாபம் ரூபா 156 மில்லியன் ஆகும். இது நிதி விளைவுகளில் ரூபா 104 மில்லியன் குறைவை சுட்டிக் காட்டுகின்றது.

(அ) வங்கியின் மீளாய்வாண்டிற்கான வரிக்கு முன்னரான ரூபா 6,169 மில்லியன் இலாபமானது தலைமை அலுவலக நட்டமாகிய ரூபா 3,651 மில்லியன், 166 கிளைகளின் (வங்கிக் கிளைகள், அஞ்சல் கிளைகள், பியச கூறுகள் மற்றும் பிரிவுகள்) மொத்த இலாபமாகிய ரூபா 10,075 மில்லியன் 55 கிளைகளதும் 2 பிரிவுகளதும் நட்டமாகிய ரூபா 255 மில்லியன் என்பவற்றைக் கொண்டிருந்தது.

(ஆ) தேசிய சேமிப்பு வங்கியின் மீளாய்வாண்டிற்கான ஒட்டுமொத்த வருமானம் ரூபா 53,045 மில்லியன் ஆகும். இதனோடு நேரொத்த முன்னைய ஆண்டின் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 46,545 மில்லியன் ஆகும். இது ரூபா 6,500 மில்லியன் அல்லது 14 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. வட்டி வீதங்களின் அதிகரிப்பே இதற்கான முக்கிய காரணியாகும்.

### 2.2 முக்கியமான விகிதங்களும் சதவீதங்களும்

கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கமைய, வங்கியின் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சில முக்கியமான விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| | | | 2012 | 2011 |
|---|---|---|---|---|
| (அ) | இலாபத்தன்மை மட்டம் | | | |
| | (i) | சராசரி பங்குதாரர் நிதியத்தின் மீதான திரும்பல் (ஆர்ஓஈ) (%) | 18.28 | 26.61 |
| | (ii) | சராசரி சொத்துக்கள் மீதான(ஆர்ஓஏ) (%) திரும்பல் | 1.26 | 2.13 |
| (ஆ) | மூலதனப் போதுமை | | | |
| | உரிமை மூலதனம் : மொத்தச் சொத்துக்கள் | | 1:20.94 | 1:20.21 |
| (இ) | திரவத்தன்மைச் சொத்துக்கள் | | | |
| | திரவத்தன்மை விகிதம் (%) | | 69.5 | 74.4 |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

உரிமை மூலதனம் மீதான திரும்பல், சொத்துக்கள் மீதான திரும்பல் மற்றும் திரவத்தன்மை விகிதம் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் முறையே 31 சதவீதம், 41 சதவீதம் 7 சதவீதத்தினால் மீளாய்வாண்டின்போது குறைவடைந்துள்ளன.

### 2.3 கடன் நிர்வாகம்

**2.3.1** 2012 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின்போது வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் வங்கியின் செயற்பாடற்றவையாக வகைப்படுத்தப்பட்ட கடன்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2012 | | | | 2011 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வழங்கப்பட்ட கடன்கள் | | 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்பாடற்ற கடன்கள் | | வழங்கப்பட்ட கடன்கள் | | 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்பாடற்ற கடன்கள் | |
| | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை |
| | | ரூபா(மில்) | | ரூபா(மில்) | | ரூபா(மில்) | | ரூபா(மில்) |
| அலங்கார கடன்கள் | 11 | 8.80 | 07 | 6.32 | 21 | 21.67 | 06 | 3.45 |
| ஓட்டோ கடன்கள் | 53 | 143.54 | 02 | 2.47 | 43 | 58.77 | - | - |
| வர்த்தகக் கடன்கள் | 02 | 1,225.95 | - | - | - | - | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | 52 | 141.15 | 43 | 85.58 | 70 | 174.14 | 31 | 55.22 |
| அரசாங்கம் - வீடு | 5,563 | 4,261.45 | 664 | 395.33 | 3,890 | 2,929.71 | 690 | 422.92 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மற்றும் ஆதனக் கடன்கள் | | | | | | | | |
| வீடு மற்றும் ஆதனம் | 3,212 | 3,957.57 | 3,643 | 1,904.99 | 2,160 | 2,629.48 | 3,729 | 2,092.83 |
| வீடு மற்றும் ஆதனக் கடன் - மிகுந்து | - | - | 07 | 7.16 | - | - | 10 | 9.32 |
| NHD ஜன செவன | - | 891.54 | - | - | - | - | - | - |
| உத்தரவாதம் மீதான தனிப்பட்ட கடன் | 153 | 116.11 | 16 | 10.69 | 19 | 13.73 | - | - |
| தனிப்பட்ட கடன்கள் | 10,591 | 2,410.14 | 1,223 | 108.39 | 5,819 | 1,215.35 | 1,160 | 60.89 |
| செயற்திட்டக் கடன்கள் | 01 | 1,373.13 | - | - | 02 | 1,263.90 | - | - |
| பதவியணியினர் கடன்கள் | 352 | 351.67 | - | - | 522 | 532.86 | - | - |
| பல்கலைக்கழகப் பதவியணியினர் கடன்கள் | 15 | 16.23 | 01 | 1.00 | - | - | - | - |
| ரட்ட இத்துறு கடன்கள் | - | - | 482 | 18.70 | - | - | - | - |
| **மொத்தம்** | **20,005** | **14,897.28** | **6,088** | **2,540.63** | **12,546** | **8,839.61** | **5,626** | **2,644.63** |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வழங்கப்பட்ட கடன்களது எண்ணிக்கையும் பெறுமதிகளும் 2012 ஆம் ஆண்டின்போது முறையே 59 மற்றும் 69 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. அதிகரித்த கடன்களில் முறையே 64,14 மற்றும் 22 சதவீதமானவை தனிப்பட்ட கடன்கள், வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன்கள் மற்றும் அரசாங்க – வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன்களை பிரதிநிதித்தவப்படுத்தகின்றன.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உத்தரவாதத்தின் மீதான தனிப்பட்ட கடன்கள் 700 சதவீத குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்குள்ளாகின.

(iii) தனிப்பட்ட கடன்கள் மற்றும் உத்தரவாதத்தின் மீதான தனிப்பட்ட கடன்கள் மீதான செயற்பாடற்ற கடன் கணக்குகளது எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டின்போது அதிகரிப்புக்குள்ளாகியிருந்தன. எவ்வாறாயினும், செயற்பாடற்ற வீடமைப்புக் கடன்களும் ஆதனக் கடன்களும் 2 சதவீதக் குறைவுக்குள்ளாகின.

### 2.3.2 ஓய்வுபெற்ற பதவி நிலை உத்தியோகத்தர்களின் கடன்கள்

உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் தறுவாயில் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த கடன்கள் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 13,364,811 ஆகும். இது 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாது இருந்தது.

### 2.3.3 இடைநிறுத்தப்பட்ட மற்றும் பதவி விலகிய உத்தியோகத்தர்களின் கடன்கள்

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ஊழியர் கடன்களான ரூபா 4,026,833,817 இல் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இடை நிறுத்தப்பட்ட, பதவி விலகிய, இராஜினாமாச் செய்த, சேவை நீக்கத்திற்குள்ளான மற்றும் சேவை தடுத்து வைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் 40 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 9,140,994 தொகை உள்ளடங்கியிருந்தது.

### 2.3.4 நெல்லின் விலையை உறுதியாகப் பேணுவதற்கு நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கப்பட்ட கடன்கள்

2012 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்திற்காக நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு 12 சதவீத வருடாந்த வட்டிவீத அடிப்படையில் ரூபா 1,225,946,271 வழங்கப்பட்டிருந்தது. புரிந்துணர்வு உடன்படிக்கைப் பிரகாரம் 2013 பெப்ரவரி 28 க்கு முன்னர் வட்டி முற்றாகச் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், தீர்த்து வைக்கப்படாத கடன் மீதியும் செலுத்த வேண்டிய வட்டியுமாக அத்தினத்தில் உள்ளவாறு மீளளிக்கப்பட வேண்டியிருந்த தொகை முறையே ரூபா 615,306,010 மற்றும் ரூபா 39,272,067 என்பனவாகும். மேலும், கடன் மற்றும் அறவிடப்பட வேண்டிய வட்டியாக 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறிருந்த தொகை முறையே ரூபா 725,945,270 மற்றும் ரூபா 26,782,201 என்பனவாகும்.

### 2.3.5 வீடமைப்புத் திட்ட நிர்மாணவேலைக்கு வழங்கப்பட்ட செயற்திட்டக் கடன்கள்

1996 ஆம் ஆண்டின்போது 20 சதவீத வட்டி வீதத்தில் தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 50 மில்லியன் மற்றும் ரூபா 30 மில்லியன் என இரு கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. 1999 ஜுலை மாதமளவில் இக் கடன்கள் முற்றாகத் தீர்த்து வைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டன. இது தொடர்பாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) தவணைப் பணம் எதுவும் செலுத்தப்படாது கடன்கள் முற்றாக நிலுவையிலிருந்தன.

(ii) 2004 நவெம்பர் 06 இல் உள்ளவாறு மேற்படி கடன்களின் பொருட்டு வங்கிக்குச் செலுத்தப்பட்ட வட்டி முறையே ரூபா 8,524,520 மற்றும் ரூபா 1,546,028 என்பனவாகும்.

(iii) 2006 மார்ச் 10 ஆந் திகதிய சபைத் தாளின் பிரகாரம், சுவீகரிக்கப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் 6 ஏக்கர், 3 றூட், 21.75 பேர்ச் ஆகும். எவ்வாறாயினும், குறித்த பெறுமதிக் கணிப்பு அறிக்கைகளின் பிரகாரமும் அளவைத் திட்டங்களின் பிரகாரமும் சொத்தின் விஸ்தீரணம் 6 ஏக்கர், 3றூட், 12.8 பேர்ச் ஆகும். இதற்கமைய, அவதானிக்கப்பட்ட வித்தியாசம் 1 றூட், 8.95 பேர்ச் ஆகும்.

(iv) மேற்படி கடனை அறவிடாமையால், 2004 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக்கு ஏற்பட்ட வட்டி இழப்பு ரூபா 185,400,000 ஆகும்.

(v) மேற்படி ரூபா 184 மில்லியன் பெறுமதியுடைய ஆதனத்தின் ஒரு பகுதி கடற்படையால் சுவீகரிக்கப்பட்டிருந்தது. இதில் ரூபா 113 மில்லியன் பெறுமதியான காணி வங்கிக்குரியதாகும். எவ்வாறாயினும், வங்கிக்குக் கிடைத்த பணம் ரூபா 70.3 மில்லியன் மாத்திரமே. விலைமதிப்பாளரது அறிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து ரூபா 42.7 மில்லியன் பெறப்படாதிருந்தது.

(vi) நிலுவையாக உள்ள வட்டியைக் கருத்திற் கொள்ளாது வழங்கப்பட்ட ரூபா 80 மில்லியன் கடன் தொடர்பாக ரூபா 70.3 மில்லியன் மாத்திரமே பெறப்பட்டிருந்தது. இதன் காரணமாக வங்கிக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 9.7 மில்லியன் ஆகும்.

(vii) ரூபா 13.3 மில்லியன் பெறுமதியுடைய மேற்படி காணியின் 3 பகுதிகள் 2008 ஜுன் 2 ஆந் திகதிய 1604/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக அரசாங்கம் எத்தொகையையும் செலுத்தவில்லை.

### 2.3.6 அடகுக்கான முற்பணங்கள்

வங்கியின் 15 கிளைகளினால் முற்பணங்கள் செலுத்துகையின் பிரகாரம், 55 சந்தர்ப்பங்களில் ரூபா 21,319,372 தங்க ஆபரணங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன்போது தங்கத்தின் விகிதம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தபோதும், பின்னர் பௌதிகப் பரிசோதனையின்போது அவை 10 இற்கும் 18 இற்கும் இடைப்பட்ட அல்லது குறைவாக விகிதத்தில் அமைந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

**2.3.7 அறவிடமுடியாத வீடமைப்புக் கடன்களுக்குரிய ஆதனங்களை சுவீகரித்தல்**

ஒன்பது நபர்களுக்கு 11 கடன் கணக்குகளின் கீழ் வழங்கிய ரூபா 15,403,677 கடன் மீதிகளை அறவிட முடியாமையால் அக்கடன்களுக்குரிய ஆதனங்கள் வங்கியால் சுவீகரிக்கப்பட்டன. அவற்றை ஏலத்தில் விற்பனை செய்து கடனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆதனங்கள் சுவீகரிக்கப்பட்ட 3 கடன் கணக்குகளுக்குரிய தொகை ரூபா 2,053,277 ஆகும். பலவந்த விற்பனை விலையால் பெறப்பட்ட தேறிய பெறுமதி ரூபா 1,400,000 ஆகும். பலவந்த விற்பனை விலையின் மூலம் தேறிய பெறுமதியிலும் பார்க்க கடன் தொகையானது ரூபா 653,277 கூடியதாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 கிளைச் செயலாற்றல்**

கிடைப்பதற்கிருந்த தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்ட மீளாய்வாண்டினது வங்கிக் கிளைச் செயலாற்றல் கீழே தரப்பட்டுள்ளது.

| | 2012 | 2011 |
|---|---|---|
| கிளைகளின் எண்ணிக்கை | 219 | 210 |
| அஞ்சல் அலுவலகக் கிளைகள் | 12 | - |
| அஞ்சல் அலுவலகங்களது எண்ணிக்கை | 4,053 | 4,058 |
| கணக்கு வைத்திருப்போரின் எண்ணிக்கை (மில்) | 17.4 | 17.0 |
| ஏடீஎம் எண்ணிகை | 231 | 221 |
| பாடசாலை வங்கிக் கூறுகள் | 1185 | 349 |

மீளாய்வாண்டின்போது 9 புதிய கிளைகள் திறக்கப்பட்டும் 5 அஞ்சல் அலுவலகங்கள் கிளைகளாக மாற்றஞ் செய்யப்பட்டுமிருந்தன. கணக்கு வைத்திருப்பவர்களது எண்ணிகை 0.40 மில்லியனால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின்போது ஏடீஎம் வலைப்பின்னல் 221 முதல் 231 அக உயர்ந்திருந்தது. இது வங்கியின் செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏனைய சொத்துக்கள் நிதிகளின் மோசடிக்கான முற்பணக் கணக்கு

தேசிய சேமிப்பு வங்கியின் 22 கிளைகளில் மோசடிக்குள்ளாக்கப்பட்ட நிதி ரூபா 13,963,717 ஆகும். இதில் 11 சதவீதம் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகும். ஓராண்டிற்கு மேற்பட்ட மொத்தத் தொகையானது மோசடிக்குள்ளான ஒட்டுமொத்தத் தொகையின் 94 சதவீதமாகும். மேலும், வங்கியின் 5 கிளைகளில் காசாளர்களிடத்தே ரூபா 1,625,141 காசுக் குறைவு அவதானிக்கப்பட்டது.

தேசிய சேமிப்பு வங்கியின் உள்ளகக் கட்டப்பாட்டு நலிவுகளின் காரணமாக, காப்புறுதி மூலம் மோசடிகள் ஈடுசெய்யப்படுவதானது நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. ஏனைய மோசடித் தொகை ரூபா 5,700,258 ஆகும். காப்புறுதியாளர் இவற்றிற்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை வழங்க மறுத்திருந்தார்.

(ஆ) மாத்தறைக் கிளைக்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட கட்டிடம்

மாத்தறைக் கிளையை இயக்குவதற்கென மாத்தறை தர்மபால மாவத்தையில் உள்ள 33.44 பேர்ச் காணியுடனான கட்டிடம் ஒன்று ரூபா 120 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது 2012 டிசெம்பர் 31 வரை பயன்படுத்தப்படாது வெறுமனே இருப்பது அவதானிக்கப்பட்டது.

2009 நவெம்பர் 17 ஆந் திகதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம், இக்கட்டிடத்தில் மாத்தறை அஞ்சல் கிளையை அமைப்பதற்குத் முடிவுசெய்யப்பட்டது. எனினும், இது தொடர்பாக இதுவரை எதுவுமே நடைபெறவில்லை. அஞ்சல் கிளையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பின் 2011 ஆகஸ்ட் 30 முதல் 2012 டிசெம்பர் 31 வரை கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,740,000 வாடகையைத் தேசிய சேமிப்பு வங்கி சேமித்திருக்கலாம்.

(இ) கிளைகளை நிர்மாணிப்பதற்குத் தேசிய சேமிப்பு வங்கியால் கொள்வனவு செய்யப்பட்ட காணிகள்

பம்பலப்பிட்டிய, நீர்கொழும்பு, பாணந்துறை கிளைகளுக்கான வடிவமைப்பு வேலைகள் 2008, 2009 ஆம் ஆண்டுகளில் ரூபா 161,115,000 செலவில் செய்யப்பட்டபோதும், 2012 டிசெம்பர் 31 வரை நிர்மாண வேலைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. காணியைக் கொள்வனவு செய்தவுடனே கட்டிட நிர்மாணவேலை திட்டமிடப்படாததால் அவை ஆரம்ப மட்டத்திலேயே இருப்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) அஞ்சல் அலுவலகங்களினூடான வங்கியின் கொடுக்கல் வாங்கல்களுக்கு அஞ்சல் அதிபருக்கு வழங்கப்படும் சேவைக் கட்டணம்

சேவைக் கட்டணம் ஒன்றை வழங்குவதற்கோ அல்லது அஞ்சல் அலுவலகப் பதவியணியினரின் செயற்திறனை அதிகரிப்பதற்கான புதிய செயல்முறை ஒன்றை இனங்கண்டு அதன்மூலம் வைப்புகளின் பெறுமதியை அதிகரிப்பதற்கோ வங்கி ஏதாவதொரு செயல்முறையே இனங்கண்டு அதனை அமுலாக்கி உள்ளதா என்பது கணக்காய்வில் புலனாகாதிருந்தது.

## 3.3 பங்குகளில் முதலீடு

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) ஒவ்வொன்றும் ரூபா 230 பெறுமதியில் வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கம்பனி ஒன்றினது 50,000 பங்குகளை 2011 செப்டம்பர் 7 ஆந் திகதியன்று விற்பனை செய்வதற்கு உரிமை மூலதன குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும், 45,500 பங்குகள் விற்பனை செய்யப்படாதிருந்தன.

(ஆ) 2011 முதல் 2012 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதியின்போது 18 கம்பனிகளில் உள்ள 74,335,419 பங்குகளது சந்தைப் பெறுமதி குறைவடைந்தமையால் வங்கிக்கு ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட இழப்பு ரூபா 642,188,028 ஆகும்.

(இ) 2011 ஆம் ஆண்டில் குத்தகை நிதிக் கம்பனி ஒன்றிடமிருந்து 142,500 பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அவற்றின் சந்தைப் பெறுமதி ரூபா 4,861,188 ஆகும். பங்குகளின் பெறுமதிக் குறைவு ரூபா 3,531,136 ஆகும். அது பங்குகளின் மொத்தக் கிரயத்தில் 42.08 சதவீதமாகும்.

(ஈ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 56 விலை குறிக்கப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் உள்ள ஒட்டுமொத்த முதலீட்டுக் கிரயம் ரூபா 8,453,508,446 ஆகும். இவற்றுள் 33.19 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 2,806,064,502 நெடுங்கால அடிப்படையில் 3 விலை குறிக்கப்பட்ட கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. 2012 ஆம் ஆண்டின்போது சந்தைப் பெறுமதி ரூபா 1,925,924,411 வீழ்ச்சியடைந்தது. ஐந்து கம்பனிகளது சந்தைப் பெறுமதி மாத்திரமே ரூபா 333,913,787 முன்னேற்றத்திற்குள்ளாகியிருந்தது. இதற்கமைய, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீடு செய்யப்பட்ட ஒட்டுமொத்தப் பங்குகளது சந்தைப் பெறுமதியின் வீழ்ச்சி ரூபா 1,592,010,624 ஆகும்.

(உ) 2011 ஆம் ஆண்டின்போது சந்தைப் பெறுமதி குறைவடைந்திருந்த தனியார் தையல் ஆலை ஒன்றினது விலை குறிக்கப்பட்ட பங்குகளில் 2012 ஆம் ஆண்டின்போது முதலீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 7,216,000 ஆகும். 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இக்கம்பனியின் பங்குகளில் உள்ள மொத்த முதலீட்டுக் கிரயம் ரூபா 21,320,717 ஆகும். 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதியில் ஏற்பட்ட குறைவு ரூபா 7,525,652 ஆகும்.

(ஊ) 2012 ஆம் ஆண்டின்போது தனியார் உரிமை மூலதனப் பொறுப்பு நிதியத்தில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 10,000,000 மற்றும் மற்றுமொரு தனியார் உரிமை மூலதனப் பொறுப்பு நிதியத்தில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 13,760,593 என்பவற்றின் மூலம் எதுவித நலனும் பெறப்படவில்லை. தேசிய சேமிப்பு வங்கி நிலையான வைப்புகளுக்குச் செலுத்தும் வட்டி 9 முதல் 11.5 சதவீத்தில் அமைந்திருந்தது. ஆகவே, வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் வருடாந்த வட்டியைக் கருத்திற் கொள்ளுமிடத்து உரிமை மூலதன பொறுப்பு நிதியத்தின் மூலம் பெறவேண்டிய ரூபா 1,823,106 கிடைக்காது போனமை புலனாயிற்று.

மேலும், பிறிதொரு உரிமை மூலதன பொறுப்பு நிதியத்தில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 50,000,000 மூலம் பெறப்பட்ட தொகை ரூபா 3,961,965 ஆகும். முதலீட்டின் மீதான பெறுவனவு 7.92 சதவீதமாகும். நிலையான வைப்புகளுக்குச் செலுத்தப்படும் வருடாந்த வட்டியுடன் ஒப்பிடுகையில் உரிமை மூலதன பொறுப்பு நிதியத்தின் மூலம் பெறப்பட்ட தொகை குறைவாகும்.

(எ) முதலீட்டுக் கொள்கைக் கூற்று 7.12(i) க்கமைய, கம்பனி ஒன்றினது முதலீட்டுப் பெறுமதி ஒட்டுமொத்த முதலீட்டுப் பெறுமதியினது 10 சதவீத்தை அதிகரிக்கலாகாது. எவ்வாறாயினும், ரூபா 1,031,844,864 மற்றும் ரூபா 1,058,577,120 எனும் முதலீடுகளை உடைய 2 கம்பனிகளில் இச்சதவீதம் முறையே 15.40 சதவீத்தாலும் 12.52 சதவீத்தாலும் அதிகரித்திருந்தன. அத்துடன்

முதலீட்டுக் கொள்கைக் கூற்றின் 7.1.2(iii) க்கமைய, ஒரு பொருளாதாரத் துறையின் முதலீட்டுப் பெறுமதி ஒட்டு மொத்த முதலீட்டுப் பெறுமதியின் 30 சதவீதத்தை அதிகரிக்கலாகாது. எவ்வாறாயினும், 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி மற்றும் நிதித் துறைகளில் அந்த வரம்பு 38.8 சதவீதமாக இருந்தது.

**3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) தேசிய சேமிப்பு வங்கியின் கிளை ஒன்றை நிர்மாணிப்பதற்கென தேசிய சேமிப்பு வங்கியால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சதாம் வீதியில் உள்ள காணியை இலங்கை கடற்படை 2009 ஜனவரி 29 ஆந் திகதியன்று சுவீகரித்திருந்தது. சுவீகரிப்பானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டடிருந்தது. இழப்பீட்டிற்கான களப் பரிசோதனை 2012 ஜுன் 28 அன்று மேற்கொள்ளப்பட்டது. இழப்பீடும் அதற்குரிய வட்டியும் களப் பரிசோதனைத் திகதியிலிருந்து விலை மதிப்புத் திணைக்களத்தின் விலை மதிப்பின் பிரகாரம் வழங்கப்படுமென பிரதேச செயலாளர் அறிவித்திருந்தார். ஆயினும், விற்பனைக் கம்பனியின் ஈடு தீர்த்து வைக்கப்படாமையால் அதனைத் தீர்த்து வைத்த பின்னரே இவ்விடயம் விலைமதிப்பிற்காகக் கருத்திற் கொள்ளப்படும் எனவும் பிரதேச செயலாளர் அறிவித்திருந்தார்.

(ஆ) தேசிய சேமிப்பு வங்கிக்கு 18 மாடிக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2008 முதல் 2012 வரை செலவான தொகை ரூபா 35,228,367 ஆகும். 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைபெறும் வேலைக் கணக்கில் இது காட்டப்பட்டுள்ளது. இது அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் வருகின்றதா என்பதைக் கருத்திற் கொள்ளாது இச்செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கட்டிடத்தை மீள நிர்மாணிப்பது தொடர்பில் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிப்பாளர் சபை நிலைமையை மீளாய்வு செய்யாதிருந்தது. செலவான தொகை பயனற்ற செலவினமாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியனியினர் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடம் | மிகை | ஒப்பந்த அடிப்படை |
|---|---|---|---|---|---|
| நிறைவேற்று தரம் | 737 | 583 | 160 | 6 | 4 |
| மேற்பார்வைத் தரம் | 1,173 | 589 | 584 | - | - |
| பதவிநிலை தரமற்றோர் | 1,649 | 1,421 | 264 | 36 | 475 |
| சிற்றூழியர் | 163 | 54 | 109 | - | 3 |
| மொத்தம் | 3,722 | 2,647 | 1,117 | 42 | 482 |

மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 3,722 ஆகும். வங்கியானது 2012 ஆம் ஆண்டின்போது 2,647 உத்தியோகத்தர்கள் / ஊழியர்களை நிரந்தர அடிப்படையிலும் 482 உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையிலும் வேலைக்கமர்த்தியிருந்தது. இதற்கமைய, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வெற்றிட எண்ணிக்கை 1,055 ஆகும். மிகை 462 ஆகும்.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த செயல்திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்

2012 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த செயற்திட்டத்தில் தரப்பட்ட பின்வரும் இலக்குகளை வங்கி எய்தவில்லை என அவதானிக்கப்பட்டது.

| | குறிகாட்டி | இலக்கு | அடையப்பட்டவை | அடையப்படாதவை |
|---|---|---|---|---|
| (அ) | வைப்புகளின் வளர்ச்சி | 14% | 8% | 6% |
| (ஆ) | சொத்துக்களின் வளர்ச்சி | 14% | 9% | 5% |
| (இ) | மொத்தச் சொத்துக்கள் (ரூபா பில்லியன்) | 530 | 510 | 20 |
| (ஈ) | மொத்த வைப்புகள் (ரூபா. பில்லியன்) | 485 | 458 | 27 |
| (உ) | வட்டி வருமான வளர்ச்சி | 16% | 12% | 4% |
| (ஊ) | சொத்துக்கள் மீதான திரும்பல் (தடவைகள்) | 1.7 | 0.85 | 0.85 |
| (எ) | வரிக்கு முன்னரான இலாபம் (ரூபா. பில்லியன்) | 6.4 | 6.17 | 0.23 |
| (ஏ) | ஊழியர் ஒருவருக்கான வைப்பு (ரூபா. | 161 | 146 | 15 |

| | | | | |
|---|---|---|---|---|
| | மில்லியன்) | | | |
| (ஐ) | ஊழியர் ஒருவருக்கான இலாபம் (ரூபா. மில்லியன்) | 2.13 | 1.38 | 0.75 |

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலும் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையின் மூலம் தலைவியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீடு

(இ) கடன் நிர்வாகம்

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு

(உ) ஆவணப்படுத்தல்

(ஊ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்குதல்

(எ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஏ) வாடிக்கையாளர் கணக்குகளை ஆரம்பித்தலும் முடிவுக்குக் கொண்டுவருதலும்.